30th November 1970]

அதனுல்தான் பொதுவாக தனியார் என்று சொல்லியிருக்கிரேம். இப்போது இருக்கிறவர்கள் நல்ல முறையில் நடத்த முன்வந்தால், அவர்களை ஏற்றுக்கொள்வதற்குத் தடை இருக்காது.

Alcoholic Drinks

*24. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to start a brewery for the manufacture of alcoholic drinks in the State ; and

(*b*) if so, the details thereof ?

வெறியம் கலந்த பானங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வெறியம் கலந்த பானங்கள் தயாரிக்கும் வடிப்பாலை ஒன்றை (Brewery) இம்மாநிலத்தில் தொடங்குதற்குரிய செயற் குறிப்பு ஏதேனும் அரசினிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : Sir, the area around Kodaikanal Road is noted for its rich harvest of grapes. Some years ago, I knew there was a proposal to set up a plant for the manufacture of grape wine. May I know what happened to that proposal ? Has the proposal been dropped ? Were its prospects fully gone into ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கமே நடத்துவது என்பது பற்றிய திட்டம்—ப்ரபோசல்ஸ்—எதுவுமில்லை என்று தான் பதில் சொன்னேன். ஆனுல் தனியார் துறையில் இது போன்ற தொழிற் சாலை ஒன்றைத் துவங்க வேண்டும் என்று கோரி பல ஆண்டுகளுக்கு முன்னுலேயே, குறிப்பாக இந்த ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்னு லேயே ஒரு மனு போடப்பட்டது. அப்போது இருந்த ஆட்சி அதைப் பற்றிப் பரிசீலித்து, அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்; அப்படி அனுமதி கொடுக்க வேண்டுமென்ருல், மதுவிலக்குச் சட்டத்தில் திருத் தம் கொண்டுவர வேண்டும்; அவ்வாறு கொண்டுவருவதும் நியாயம் தான் என்று முடிவு செய்திருந்தாலும்கூட, எப்படியோ அது நிறை வேற்றப்படாமலேயே இருந்தது. இப்போதைய அரசு அதற்கு ஒரு முடிவெடுத்து அது குறித்துச் சட்ட மன்றத்திலே ஒரு மாசோதாவைப் பிரேரேபிக்க இருக்கிறது. அதுபற்றி இப்போதே ஏராளமான மனுக் கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே இந்த மசோதாவை நிறை வேற்றிய பிறகு, அந்தத் தொழிற்சாலைக்கான அனுமதி கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

[30th November 1970

THIRU G. VASANTHA PAI : In view of the new Act which is coming and also the fact that new liquor shops are set up in almost every street corner, may I know whether the Government think of reviewing their policy relating to prohibition ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத்தைப் படிக்கும்போது, தமிழக அரசு மது விலக்குக் கொள்கையைக் கைவிட்டுவிடப் போவதில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அதிலே உற்பத்தியாகிற மது ''வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வர்களுக்கு வழங்கவும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதுவிலக்கு வேண்டாம் என்ற கட்டத்தை இப்போது அடைய வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்

THIRU G. VASANTHA PAI : Sir, I want to submit that in the liquor shops which are now put up in every street corner in the City of Madras, I am given to understand that there is adulteration of liquor. Will the Government make an inquiry into this and stop adulteration of liquor which is already a prohibited drink ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மதுவிலேகூட கலப்படம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் என்று கூறுகிறார். மதுவில் கலப்படம் இருந்தால், அதைத் தடுக்கச் சட்டம் இருக்கிறது. எனவே எங்கே எப்படி கலப்படம் செய்யப்படுகிறது என்று தகவல் சான்னால், நிச்சயமாகக் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்வார்கள். மதுவில் கலப்படம் செய்வதுபற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டாம்.

திரு. எஸ். ராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் மூலை முடுக்கெல்லாம் மதுக்கடை இருக்கிறது என்று சொன்னார்கள். என் கண்ணில் ஒன்றுகூட படவில்லை. எனவே அவர் கண்ணில் மட்டும் எப்படித் தென்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறவர்களுக்குத்தான் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்தக் கடைப் பக்கமே கூட போக வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : கொடைக்கானலிலிருந்து கிரேப் ஒயின் தயார் செய்து வினியோகிக்கும்போது, அதில் ஆல்கஹால் இல்லாமல் கிரேப் ஒயின் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அப்படிச் செய்பவர்களிடம் இந்த ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லலாம்.

30th November 1970]

THIRU G. VASANTHA PAI : Sir, to answer the query of my hon. Friend Thiru Raghavanandam to the Hon. Minister, I would like to say that in the place where I am residing *i.e.*, First Main Road, Gandhinagar, Adyar, there is a wine shop and in the place where I go to our Sabha in Habibullah Road, there is another wine shop and in the place I pass through Nungambakkam, I find some Madras Wines. So I find a lot of liquor shops. A few days ago a gentleman came to my house after trying to meet the Hon. Minister Thiru Aditanar who lives opposite to me and not able to get access to him, he brought some six bottles alleged to be beer with six labels which were blank. He said "I could not get access to Thiru Aditanar. So I have come to you here. You are our M.L.C. The bottles contain only 20% water" He opened one bottle and I said, "I do not drink and I do not know the virtue of it. You please go to the person who drinks or give a complaint to the police station." He is supposed to have got those bottles from one of these shops and those bottles are passed off as beer with different labels. I have got the labels with me and I shall produce them when the Bill comes up.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு உறுப்பினர்கள் மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தகவல் கொடுக்கக் கூடாது என்ற மரபு இருக்கிறது. எனவே தகவலைத் தனியாகத் தந்தால் விசாரிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, ''போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவல் கொடுக்கும்படி சொன்னேன்'' என்று சொன்னார்கள். வழக்கறிஞருக்கு உரிய ஆலோசனையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். லிக்கர் ஷாப்புக்கான அனுமதிகள் பார்த்துத்தான் வழங்கப்படுகின்றன. ஆங்காங்கே அவர்கள் கடை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தவறு செய்தால் அதற்கு என்று சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழிமுறைகள் இருக்கின்றன. அதில் யாராவது தவறு செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தெரிந்தால், அதைப்பற்றி எங்களுக்கு எழுதியனுப்பினால், போலீஸ் துறை மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுகிறோம். யாரோ ஒருவர் கலப்படம் செய்கிறார் என்பதற்காக ஒரு சட்டத்தையே, கொள்கையையே மாற்றுவதுபோல் கேள்வி கேட்பது சரியில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Strike

*25. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that there was a strike by the conductors and drivers of the in State Transport Madras City during the month of April 1970, consequent on eve teasing by the brother of a bus driver ; and

(*b*) if so, the action taken against the culprit ?